# ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின்



# ஆன்மீகப் பணியும் வாழ்வாதாரப் பணியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ அபிராமி அம்மன்

# ஆலயம்

**27.11.2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் சக்தி அபிராமி சக்தி

டென்மார்க் நாட்டில் பிரண்டாபதியில் தான்தோன்றி அம்மனாக எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் அவதார அற்புதங்கள் பல. ஈழமணித் திருநாட்டின் யாழ் ஏழாலை மேற்கைக் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி. திருநாவுக்கரசு மகேஸ்வரி தம்பதிகளுக்கு பராசக்தி வடிவான தெய்வப் புதல்வியாக ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மா அவதரித்தார். சிறு வயதிலே தெய்வபக்தியுடன் வாழ்ந்து வந்தார். அம்மாவின் ஒன்பதாவது வயதில் அபிராமி அம்மன் அபிராமி உபாசகியை ஆட்கொண்டார். அபிராமி அம்மனின் அருட் கடாட்சத்தினால் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மாவின் தெய்வ அம்சத்திற் கேற்றால் போல் தெய்வ அம்சம் மிக்க ஸ்ரீ பாலன் ஐயாவை மணம் முடித்து வாழ்க்கை நடாத்திக் கொண்டு இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ அபிராமி அம்மாவின் அருட் கடாட்சத்தினால் பாலமுருகனைப் போல் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தார். இப்படி இருக்கையில் திடீரென ஓர் நாள் ஸ்ரீ அபிராமி அம்மன் உபாசகி அம்மாவின் கனவில் தோன்றி நீ என்னை ஆதரித்து இவ்வுலகில் வாழும் மக்களைக் காத்தருள வேண்டும் என ஆணையிட்டார்.

உபாசகி அம்மா சிறிது தயக்கம் கொண்டார். வெளிநாட்டில் நான் எப்படி இதைச் செய்வது என்பது தான். அம்மன் உன் உடலில் உன்னை ஆட்கொண்டு விட்டேன் யாம் இருக்க பயம் ஏது? நான் இட்ட கட்டளையை நிறை வேற்றுவதற்கு முழுசக்தியையும் உன்னிடம் தந்துவிட்டேன்.

மக்களைக் காத்து அருள வேண்டும் என்று சொல்லிவிட்டு அம்பாள் மறைந்து விட்டார். அம்மனின் ஆணைப்படி டென்மார்க் நகரில் பிரண்டாபதியில் அபிராமி அம்மனை வழிபடுவதற்கு ஒரு இடத்தை ஒதுக்கி பூஜித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து பக்தர்கள் வருகையும் அதிகரிக்கத் தொடங்கியது. 27.03.1995 வருடம் பங்குனி உத்தர நன்னாளில் உபாசகி அம்மா நாகம்மாளின் உருவெடுத்து நாக பாம்பு போல் தரையில் உருண்டு ஆடி உதிரம் கொண்ட அற்புதமான மாணிக்கக் கற்களை தன் வயிற்றில் இருந்து திருவாயினால் கக்கி எடுத்தார்.

அன்றைய தினம் உபாசகி அம்மாவின் பாதம் உள்ளங்கால்கள் இரண்டிலும் ஐங்கோண சக்கர அடையாளம் சிவப்பு நிறத்தில் காணப்பட்டது. அத்துடன் நடந்த இடமெல்லாம் ஐங்கோண சக்கரம் காணப்பட்டது. மாணிக்கக் கற்களை பாலால் அபிசேகம் செய்து ஐம்பொன்னால் செய்யப்பட்ட நாகபாம்பில் பதித்து இன்றும் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

விசேட பூஜை அபிஷேக யாகம் ஆலயத்தில் இடம் பெறும்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாளின் மாணிக்க கற்களின் பிரகாச ஒளி இன்றும் அதிகரித்தபடி நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது. அன்றில் இருந்து ஒவ்வோர் சனிக்கிழமையும் பிள்ளைப்பாக்கியம் இல்லா தவர்களுக்கு நாகம்மாளிற்கு பால் குங்கும அபிசேகம் செய்து நாக தோசங்களை நீக்கி குழந்தைகள் கிடைத்த பக்தர் எத்தனையோ பேர் அன்றுதொட்டு இன்றுவரை ஆலயத்தில் நடைபெறும் பெரும் அற்புதமாகும்.

இதனைத் தொடர்ந்து 1996 ஆம் வருடம் அபிராமி உபாசகி தாயார் இளம் வயதில் தங்கள் இல்லறவாழ்க்கையைத் துறந்து காவி உடை உடுத்து கழுத்தில் உருத்திராட்சம் அணிந்து அம்மாவின் திருசடைமுடி சிவலிங்கப் பெருமானையும் நாகம்பாளின் சற்பத்தையும் தாங்கியபடி கையில் சூலம் உருத்திராட்ச மணிகள் அணிந்தபடி அபிராமி அம்பாளின் அம்சமாகவே காட்சி அளிக்கத் தொடங்கி விட்டார்.

1996ஆம் வருடம் திருக்கடவூர் அபிராமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் ஆலயத்தைப்போல டென்மார்க் பிரண்டாபதியில் அமைந்து இருக்கும் ஆலயத்தில் அபிராமி அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டார். அதனை தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் டென்மார்க், நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ்,சுவிஷ், இலண்டன் ஆகிய நாட்டுப் பக்தர்களின் வருகையும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. அம்பாளின் அருளும் நிறையத் தொடங்கி விட்டது. 1998 ஆம் வருடம் ஒக்டோபர் 29 ஆம் திகதி அபிராமி அம்மனின் சிறிய ஆலயத்தில் தாயார் பூசை வழிபாடு செய்து கொண்டு இருந்த போது திடீரென அம்மன் விக்கிரகத்தில் இருந்தவாறு புகை மண்டலம் தோன்றியது. பின்பு உபாசகி தாயாரின் திருமேனி முழுவதும் நீலநிறமாக மாறிவிட்டது. கையில் சூலம் தோன்றி காட்சி அளித்தது.

தாயார் தியான நிலையில் இருந்தவாறு பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார். தாயாருக்கு பால் பஞ்சாமிர்தம் வீபூதி சந்தன குங்கும அபிசேகம் செய்யப்பட்டு தீபாராதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டப்பட்டு பக்தர்கள் அரோகரா கோசம் எழுப்ப பூசைகள் இடம் பெற்றது. 1998 ஆம் வருடம் டிசம்பர் 31 திகதி இரவு அபிராமி அம்மனுக்கு விசேட அபிசேக தீப ஆராதனைகள் யாகம் என்பன நடைபெற்று அன்று நள்ளிரவு 12.00 மணிக்கு ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னையார் பார்வதி அம்மனாக அவதாரம் எடுத்தார்.

அன்று தொட்டு இன்று வரை ஒவ்வொரு வருடம் டிசம்பர் 31 ந் திகதி உபாசகி தாயாரின் அவதார நிகழ்வுகள் இடம்பெறும்.

வருட அவதார அம்மன்

1999 காளிஅம்மன்

2000 துர்க்கைஅம்மன்

2001 கருமாரி அம்மன் அவதாரத்தில் சிவலிங்கப்பெருமான் தாயாரின் திருவாயில் வெளிவந்த அற்புதக்காட்சி இடம் பெற்று உள்ளது.

2002 நாகம்பாள் (புது ஆலயம் அடிக்கல் நாட்டப்பட்டது)

2003 கண்ணகை அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 முத்துமாரி அம்மன்

2005 மீனாட்சி அம்மன்

2006 விசாலாட்சி அம்மன்

2007 காமாட்சி அம்மன்(ஆலய மகாகும்பா பிஷேகம் இடம்பெற்றது)

2008 வைஷ்ணவி அம்மன்

2009 சிவகாமி அம்மன்

2010 பன்னாரி அம்மன்

2011 புவனேஸ்வரி அம்மன்

2012 வராகி அம்மன்

2013 இராஜராஜேஸ்வரி அம்மன் (இராஜகோபுர மகா கும்பா அபிஷேகம்)

2014 மனோன்மணி அம்மன்

2015 அன்னபூரணி அம்மன் அவதாரகால முதல் மூன்று நாட்களிலும் ஆறுகால அபிஷேக யாக பூசை இடம்பெறும். அவதாரத்தில் அன்று இரவு அம்பாளுக்கு விசேட அபிஷேக யாக பூசை இடம் பெற்று நள்ளிரவு 12.00 மணிக்கு அம்பாளி அவதாரம் தாங்கிய தாயாருக்கு பால், பஞ்சாமிர்தம், வீபூதி, சந்தன,குங்கும அபிசேகம் இடம்பெற்று அலங்காரம் நிறைவுபெற்று தீப ஆராதனைகள் இடம்பெற்று தேரில் உள்வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவரும் காட்சி இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து பக்தர்களுக்கு அம்பாளின் அவதார நூல் வீபூதி பிரசாதமும் கைவிஷேடம் வழங்கப்படும். அடுத்து மூன்று நாட்களும் தாயாருக்கு விசேட அபிஷேகம் பூஜை இடம்பெற்று பக்தர்கள் அனைவருக்கும் நோய் துன்பம் நீங்க வேப்பிலை வீபூதிப் பிரசாதம் தாயாரினால் வழங்கப்படும்.

பண்பாட்டுணர்ச்சியும் தமிழ்மொழி உணர்ச் சியும் பக்தி உணர்ச்சியும், இலங்கைத் தமிழர் களிடையே பாரம்பரியம், கல்வி அனுபவத்தாலே உலகுக்கு சிறப்பான பெரும் பணியைச் செய்து வரும் தெய்வீகத் திருத்தலமாக அபிராமி அன்னையின் டென்மார்க் பிரண்டாபதித் தலம் விளங்குகிறது.

நமது தமிழ்சைவ மக்களை உலகு எங்கிலும் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, சுவிஸ், இலண்டன், பிரான்ஸ், நோர்வே, சுவீடன், லக்சம்பேர்க், இத்தாலி, நெதர்லாந், இலங்கை, இந்தியா, மலேசியா, அவுஸ்ரேலியா இன்னும் பல்வேறு உலக நாடுகளிலேயும் வாழும் சைவ அடியார்கள் இந்துக்களும் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தவர்களும் இரு தசாப்தத்திற்கும் மேலாக நம்பி வழிபடும் திருத்தலமாக டென்மார்க் பிரண்டாபதி ஶ்ரீ அபிராமி அம்மன் அவதார நாயகியான உபாசகி அன்னையின் ஆலயம் விளங்குகின்றது.

அம்மாவின் திருவருளும் குருவருளும், சுகமும், நலனும், வளமும், நீண்டாயுளும் பெற்று மண்ணுலகிலே சிறப்புடன் வாழ தாயான அபிராமி அன்னையை பிரார்த்திக் கின்றோம். டென்மார்க் பிரண்டாபதி அருள் மிகு அபிராமி உபாசகி தாயாரின் அற்புதங்களும் அரும் பணித் தொண்டுகளும் டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து தான் தோன்றி யாகத் தோன்றி அருளாட்சி புரியும் அபிராமி அம்பாள் அபிராமி உபாசகி தாயார் ஈழத் தமிழர்கள் வாழ்விலும் இன்னல் துடைத்து இனிய வாழ்வு வழங்கிட இன்முகத்துடன் பெரும் அரும்பணியாற்றி வருகின்றார்.

அன்னை உபாசகி அம்மையார் ஞான ஒளியாக, அன்பு மயமாக, தெய்வ வடிவாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியின் சங்கமமாக, கருணையின் கடலாக, ஜோதிச் சொருபமாக, மானிட வடிவம் தாங்கித் தேடிவரும் பக்தர்களுக்கு நாடிச் சென்று அருள் வழங்கி காக்கின்றார்.

அன்னையின் தூய உள்ளம்,பிறர் நலம் குறித்த ஏக்கம், தன்னைத் தானே வருத்தி பிறருக்காக மன்றாடும் தன்மை இப்படி உயர்ந்த தத்துவ நிலையே அம்மையாரின் கோட்பாடு ஆகும்.

உபாசகி தாயார் தவ ஒளி வீசும் கண்கள், நெற்றியில் குங்குமத்திலகம், கழுத்தில் உருத்திராட்சம், தயகமல வாசினியாக அன்பே வடிவானவள், அன்பையே போதிப்பவள், அன்பால் அடியவர்களை அரவணைப்பவள், தாயுமானவள், அனைவருக்காகவும் பாரபட்சம் இன்றி ஒரே மாதிரியான முறையில் பிரார்த்தனை செய்வார் அன்பு, கருனை, பக்தி, ஒழுக்கநெறி இவைகளின் உயர்வை அறநெறி போற்றும் வண்ணம் வாழ்பவர்தான் அன்னை அவர்கள். நோயினால் துன்பப்படுபவர்களை தேசிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனியினால் நோய்களை தீர்த்து வைப்பார். அம்மனின் அபிஷேகயாகநீர், சாந்திநீர் நோய் களை தீர்த்துவைக்கும் சக்தி வாய்ந்தவை. அன்னையின் அளப்பிலா அருளினால், உவப்பிலா ஆனத்தத்தில் அடியார்கள் கஷ்டம் நீங்கி நிற்கின்றது. பாலுக்குள் நெய் இருப்பது போல் உபாசகி அன்னைக்குள் அபிராமி அம்பிகை நிறைந்து இருக்கின்றார்.


திருவாக்கு அரசியாக அமர்ந்து அருள் வாக்கு வழங்கும் தெய்வமாக நம்பி நிற்கும் அடியவரின் குறையனைத்தும் போக்கி வைக்கின்றார். அண்டி வந்தோரின் அல்லல் களைந்து அபயக்கரம் தந்து காக்கும் தெய்வம் தான் அன்னை அபிராமி உபாசகியார். அன்னையிடம் பயன் பெற்றோர் பலர்.

சக்தி மிகுந்த அன்னை பல அம்பாளின் அவதாரசக்தியாகவும் அருள் பாலிக்கின்றார். நாகம்பாளாக குழந்தை பாக்கியம் இல்லாதவர் களுக்கு நாகம்பாளிடம் நாக தோசம் நீக்கி குழந்தை வரம் கொடுக்கின்றார்.அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டென்மார் அபிராமி அம்மன் ஆலயத்தில் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயாரால் வழங்கப்பட்ட உதவிகளில் சில .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் மானிட உருவத்தில் அவதரித்து மக்களின் இதயங்களில் மகாசக்தியின் மறுவடிவமாய் மக்கள் குருவடிவாய் திகழும் அன்னையின் திருக்கோவில் ஈழத் திருநாட்டில் வவுனியா நகரில் நொச்சிமோட்டையில் உபாசகி அம்மையாரின் ஆன்மீக நிலையம் அமையப் பெற்றுள்ளது.

அம்மையார் அவதரித்த சொந்த மண்ணில் யாழ் ஏழாலையிலும் அபிராமி அன்னையின் ஆன்மீக நிலையம் அமையப் பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து வறிய நிலைக்குள் உட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக பசு மாடுகள், கோழிக்குஞ்சுகள், சிறுகைத் தொழில் களுக்கான பண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு மாணவர்களுக்கு அன்னை யாரின் அரவணைப்பில் அறநெறிப்பாடசாலை கலை வகுப்புக்கள் சங்கீதம், நடனம் கணணி வகுப்புகள், பாடசாலை கற்றல் உபகரணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த வருடங்களில் அன்னையால் வழங்கப்பட்ட உதவிகள்

வாழ்வகம் மருதனார்மடம் (கண் பார்வையற்ற முப்பது பிள்ளைகள் கற்றல் உபகரணம் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி கந்தபுரம் கண்பார்வையற்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளுக்கு 8000/= செல்வி. ஜதுஸா செல்வி.ஜனுஸா இருவருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது

கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள இருபத்தி ஐந்து முதியோர்களுக்கு படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டது

கைதடி நவீன் பாடசாலை மாணவர்களுக்கு மாதம் நாலாயிரம் ரூபா வீதம் ஒரு வருடம் வழங்கப்பட்டது

வன்னியைச் சேர்ந்த பல்கலைக்கழக ஆறு மாணவர்களுக்கு மாதம் நான்காயிரம் ரூபா வீதம் ஒருவருடத்திற்கு வழங்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைமாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கப்பட்ட விவரங்கள்

- புங்குடுதீவு மகாவித்தியாலய 45மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 20 மாணவர்களுக்கும் தலா 5000 ரூபா வழங்கப்பட்டது.
- மானிப்பாய் உயரப்புலம் மகாவித்தியாலய 60 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கொப்பி, பேனா, பென்சில், கொம்பாஸ் புத்தக பாக் மற்றும் உடுப்பு சப்பாத்து ஆகியவை. வழங்கப்பட்டது.
- உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் 110மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கப்பட்டது.
- கந்தரோடை தமிழ்க்கந்தையா மகாவித் தியாலய 60 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦நல்லூர் சதானந்தா மகாவித்தியாலய 50மாணவர்களுக்கு கற்றல் உபகரணங் களும் சத்துணவும் வழங்கப்பட்டது.

✦கொட்டடி நமசிவாய வித்தியாலயம் 41 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

✦நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

✦கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மகாவித்தியாலய 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

✦மல்லாவி மயில்வாகனம் வித்தியாலயம் 90 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

✦வற்றாப்பளை மகாவித்தியாலய 40மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டது.

✦பாரதி இல்லம் (முல்லைத்தீவு 200 மாணவர்களுக்கு சுற்றுலாச் செலவாக ரூபா 100000/= வழங்கப்பட்டது)

✦மல்லாவி நல்லாயன் ஆச்சிரமம் 224 பெண்பிள்ளைகளுக்கு சப்பாத்துகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது )

- துக்காய் முதியோர்களுக்கு பிரதேச செயலகம் ஊடாக 105குடும்பங்களுக்கு பால்,மா, பெற்சீற் ,உடுப்புகள் வழங்கப் பட்டது
- துணுக்காய் விநாயகபுரம் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றுலா ,உடுப்புவகை 20000/= வழங்கப்பட்டது.
- 24.01.2011ல் மட்டகளப்பு கல்முனை திரௌபதி அம்மன் ஆலயத்தில் கல்முனை மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உடைகள் மற்றும் நிவாரணப் பொருட் களும் அன்னதானமும் வழங்கப்பட்டது.
- அதே வருடம் வவுனியா பிரதேசத்தில் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது.
- மலையகத்தைச் சேர்ந்த மக்களுக்கும் உபாசகி அம்மையார் அவர்கள் நிறைய பணிகள் செய்துள்ளார்.
- அதே வருடம் வவுனியா பிரதேசத்தில் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வவுனியா பிரதேசசபையின் ஊடாக வேலங்குளம் முருகனூர் 500 குடும்பம் நுளம்பு வலை.சீனி. மா,அரிசி பருப்பு 5.25000/=
- மட்டக்கிளப்பு நாவிதன் வழி கல்முனை மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 500 குடும்பம் நுளம்பு வலை,சீனி. மா,அரிசி பருப்பு 5.25000/=
- வவுனியா ORHAN நிறுவனம் செவிப்புலன் கண்பார்வையற்றோர் உடுப்பு, சீருடை 100 பேர் 1.00000/= வழங்கப்பட்டது.

  உடுப்பு ,சாப்பாட்டுக் கோப்பை வழங்கப் பட்டது. 50.000/=
- முல்லைத்தீவு நகரத்தில் 2015 ஒக்டோபர் வெள்ள அனர்த்த நிவாரணமாக சீனி மா பால்மா தேயிலை வழங்கப்பட்டது. ஒருகிழமை 1000 பேருக்கு எல்லாச் சமயத்தவர்கள் உட்பட 1000000/= வழங்கப் பட்டது. வாழ்வாதாரமாக பசு மாடுகள் தையல் இயந்திரங்கள் துவிச்சக்கர வண்டி கள் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பணிகள் அனைத்தும் டென்மார்க் ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் இருந்தது ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரால் கடந்த 2015ஆம் ஆண்டு வழங்கப்பட்டது .

எதிர்வரும் காலங்களில் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் ஆன்மிக நிலையங்களுடாக இலங்கை வாழ் மக்களுக்கு தாயாரின் பணிகள் தொடரும்.

## 2015 டிசம்பர் மாதத்தில் இருந்து இன்றுவரை ஏழாலை ஸ்ரீஅபிராமி அம்மன் ஆன்மீக நிலையத்தினூடாக தாயாரினால் வழங்கப்பட்ட உதவிகள்.

### 15.12.2015

- கணவனை இழந்த பெண்களுக்கான தையல் இயந்திரங்கள்(5) 137500/=
- 2 பசுமாடுகள் 105000/=
- 50 மாணவர்களுக்கு புத்தகப்பை 30000/=

### 24.01.2016

- 2 பசுமாடுகள் 105000/=
- 4 தையல் இயந்திரங்கள் 110000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ உடுபுடவைகள் 350000/=
- ❖ கோழிக்குஞ்சுகள் 20குடும்பங்கள் 70000/=
- ❖ பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களுக்கு கற்றல் உதவி (5000X7) 35000 /=

## 01.02.2016 தொடக்கம் 24.02.2016 வரை

- ❖ அறிநெறி மாணவருக்கு சீருடை96000/=
- ❖ 2 பசுமாடு 97000/=
- ❖ கோழிக் குஞ்சுகள் 50 குடும்பங்கள் 210000/=
- ❖ 4 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் (60பேர்) 59000/=

## 01.03.2016 தொடக்கம் 31.03.2016வரை

- ❖ கோழிக்குஞ்சுகள் 180000/=
- ❖ கற்றல் உபகரணங்கள் (75பேர்) 70000/=
- ❖ வறிய குடும்ப உணவுப் பொருட்கள் 185000/=

## 01.04.2016தொடக்கம் இன்று வரைக்கும்

- ❖ பசுமாடு(3) 165000/=
- ❖ உணவுப் பொருட்கள் 268000/=
- ❖ தையல் இயந்திரங்கள்(4) 110000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ வாழ்வகம் 10000/=
- ❖ கண்ணாடி 7000/=
- ❖ விசேட கல்வி அலகு (இணுவில்) 25000/=
- ❖ ஏழாலை மேற்கு மாதர்சங்கம் 10000/=
- ❖ அறிநெறி மாணவர் கற்றல் உபகரணங்கள் 740000/=
- ❖ தெல்லிப்பளை ஆயுள்வேத வைத்தியசாலை 80000/=
- ❖ சன்போயிஸ் விளையாட்டு கழகம் 20000/=
- ❖ ஏழாலை சன்மார்க்க முன்பள்ளி 200000/=
- ❖ சிறுகைத்தொழில் உதவி பருத்தித்துறை 25000/=
- ❖ கோழிக் குஞ்சுகள் 180 குடும்பங்கள் 365000/=
- ❖ உடுவில் பிரதேச சபை விளையாட்டு நிகழ்வு 5000/=
- ❖ உடுவில் பிரதேச சபை கலாசாரநிகழ்வு 5000/=
- ❖ அம்பனை வைரவர் கோவில் 150000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாரால் வழங்கப்பட்ட உதவிகள்
## 01.04.2016 தொடக்கம் இன்றுவரை

- 4 தையல் இயந்திரங்கள் 110000/=
- 2 நீர்இறைக்கும் இயந்திரங்கள் 38000/=
- கோழிக்குஞ்சுகள் 20 குடும்பங்கள் 50000/=
- அறிநெறி மாணவர்களுக்கான சீருடை 78000/=
- பாடசாலை உபகரணங்கள் 28000/=
- நொச்சிமோட்டை ம.வி. நூலகம் 10000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அபிராமி உபாசகித் தாயார் ஏழாலை, நொச்சி மோட்டை ஆகிய இரு ஆலயங் களிலும் அறிநெறி ஊடாக ஆன்மீகத்தை வளர்க்கும் நோக்குடன் ஏழாலையில் 92 மாணவர்களையும், நொச்சிமோட்டையில் 76மாணவர்களையும் அரவணைத்து ஆறு ஆசிரியர்களை நியமித்து ஆன்மீகக் கல்வியைப் புகட்டுகின்றார். அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், உணவுகள், சீருடைகள் போன்ற வற்றையும் வழங்கி மகிழ்விப்பதுடன் அவர்களை மேலும் மிளிர வைப்பதற்காக ஏழாலையில் சங்கீதம், நடனம் ஆகிய வகுப்புக்களை நடாத்தி வருகின்றார். எதிர்காலத்தில் நொச்சிமோட்டை ஆலயத்திலும் இம் மாணவர்களுக்கு கணினி, சங்கீதம், நடனம் ஆகிய வகுப்புகளும் நடத்துவதற் கான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார்.

தாயாரது ஆன்மீக பணியும் வாழ்வாதாரப் பணியும் மாணவர்களுக்கான உதவிகளும் எம்மக்களுக்கு பேருதவிய அமைந்து வருகின்றது.

தாயாரது அருட்கடாச்சமும் அவரது அருளும் ஆசியும் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திப் போமாக.

தொடரும்.............

ஓம் சக்தி அபிராமி சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org